# <u>பத்திரிக்கை செய்தி</u>

சேலம் மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள **<u>722 சமையல் உதவியாளர்</u>** பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், சேலம் மாநகராட்சி ஆத்தூர் மற்றும் எடப்பாடி நகராட்சி அலுவலகங்களில் இன சுழற்சி வாரியாக தகவல் தெரிந்துகொள்ளலாம்.

சமையல் உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் குறித்து, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், சேலம் மாநகராட்சி ஆத்தூர் மற்றும் எடப்பாடி நகராட்சி அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம். மேலும் salem.nic.in என்ற இணையதள முகவரியிலும் விண்ணப்பம் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சமையல் உதவியாளர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும். அவ்வாறு பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு காலம் பணியாற்றிய பின்னர் சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 (Level of Pay–ரூ.3000–9000/–)) ஊதியம் வழங்கப்படும். இப்பணிக்கு 21 முதல் 40 வயது வரை (பொதுப்பிரிவு மற்றும் தாழ்த்தப்பட்டோர்), 18 முதல் 40 வயது வரை (பழங்குடியினர்) 20 முதல் 40 வயதுடைய (விதவை, கணவரால் கைவிடப்பட்டோர்) மற்றும் கீழ் குறிப்பிட்டுள்ள குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது நிர்ணயம், அறிவிப்பு வெளியிடப்படும் தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

1. குறைவான பார்வைத்திறன் (மூக்குக் கண்ணாடி மூலம் பார்வை சரிசெய்யப்பட்டது).
2. உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்)
3. குணப்படுத்தப்பட்ட தொழு நோய் (40 சதவீதம் கைகளின் முழு செயல்பாட்டு திறன் உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது).
4. திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்.
5. குறிப்பிட்ட கற்றல் திறன் குறைபாடு (மிதமான)

குறைந்த பட்ச கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு தோல்வி / தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் சரளமாக பேச தெரிந்திருக்க வேண்டும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ–க்குள் இருக்க வேண்டும். (ஊராட்சி–குக்கிராமம்–வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை).

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும்போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மாநகராட்சி ஆத்தூர் மற்றும் எடப்பாடி நகராட்சி அலுவலகத்தில் மட்டும் விண்ணப்பிக்க இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்.29.04.2025, மாலை 05.45 மணிவரை மட்டும்** அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் நகல்கள்

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ்
2. SSLC மதிப்பெண் சான்றிதழ்
3. குடும்ப அட்டை
4. இருப்பிடச் சான்று
5. ஆதார் அட்டை
6. சாதி சான்று
7. விதவை, கணவரால் கைவிடப்பட்டவர் என்பதற்கான சான்றிதழ்
8. மாற்றுத்திறனாளி அடையாள அட்டை

அஞ்சல் துறையின் மூலம் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படும்போது ஏற்படும் கால தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பேற்காது. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சேலம் மாநகராட்சி ஆத்தூர் மற்றும் எடப்பாடி நகராட்சி அலுவலகங்கள் தவிர்த்த இதர அலுவலகங்களில் அளிக்கப்படும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

காரணம் ஏதும் குறிப்பிடாமல் நியமன அறிவிப்பு அறிக்கையினை இரத்து செய்வதற்கும் திரும்ப பெறுவதற்கும் திருத்துவதற்கும் கெடு தேதியினை நீட்டிப்பதற்க்கும் மாவட்ட ஆட்சியருக்கு உரிமை உண்டு.

# விண்ணப்பப்படிவம்

## சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பம்

| மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் / மாநகராட்சி / நகராட்சி | விண்ணப்பிக்கும் பள்ளி |
|---|---|---|
| | | |

சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தினை ஒட்டவும்

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர்: | |
| தந்தை / கணவர் பெயர்: | |
| கைபேசி எண்: | |
| விண்ணப்பதாரரின் இருப்பிட முகவரி (குடும்ப அட்டையில் உள்ளபடி) மற்றும் வட்டாச்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது | |
| ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி/பேரூராட்சியின் பெயர்: | |
| கல்வித்தகுதி (சான்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும்). குறைந்தபட்சம் 10 தோல்வி/தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் கட்டாயம் எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | |
| பிறந்ததேதி/வயது: | |
| சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாச்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| மாற்றுத்திறனாளி (ஆம் எனில் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை இணைக்கப்படவேண்டும்) | ஆம்/இல்லை |

| | |
|---|---|
| ஆதரவற்ற விதவை / கணவனால் கைவிடப்பட்டவரா? ஆம் எனில் (வட்டாச்சியரின் சான்று இணைக்கப்படவேண்டும்): | ஆம்/இல்லை |
| பணியிடம் கோரும் மையம் / பள்ளியின் பெயர்: | |
| விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் பணியிடம் கோரும் மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் (மூன்று கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்) | |

நாள் :

இடம் : **விண்ணப்பதாரர் கையொப்பம்**

**<u>இணைப்பு</u>**

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல்
2. SSLC மதிப்பெண்சான்றிதழ் நகல்
3. குடும்ப அட்டை நகல்
4. ஆதார் அட்டை நகல்
5. சாதிச் சான்றிதழ் நகல்
6. மாற்றுத்திறனாளி அடையாள அட்டை
7. விதவை சான்று
8. கணவரால் கைவிடப்பட்டவர் என்பதற்கான சான்று
9. விண்ணப்பதாரர் இருப்பிட சான்று
10. பணியிடம் கோரும் சத்துணவு மையத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்பும் 3 கி.மீக்குள் அமைந்துள்ளது என்பதற்கான சான்று (கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட வேண்டும்)